**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 232/2019</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | செல்வேந்திரன் | P.W.1. (Cross) |
| த/பெ. | : | ரத்தினசாமி | |
| தேதி | : | 02.02.2026 | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

1. எனது தந்தையார் பெயர் ரத்தினசாமி என்றால் சரிதான். ரத்தினசாமி எந்த வருடம் இறந்தார் என்றால் 2008ம் ஆண்டு இறந்தார். நான் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பஞ்சமூர்த்தி, மோகனசுந்தரம், சின்னதுரை ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புல எண். 111/2ல் 27 செண்ட், 113/13ல் 5 செண்ட், புல எண்.216/3ல் 43 செண்ட், புல எண். 216ல் 32 ¼ செண்ட், புல எண். 127/17 ல் 33 செண்ட் ஆகிய புல எண்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா 2வது அயிட்ட சொத்தான புல எண். 216/3ன் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா 3 வது அயிட்ட சொத்தான புல எண். 116/3ன் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. தாவா 4 வது அயிட்ட சொத்தான புல எண். 127/17ன் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும். கிழக்கில் மெயின்ரோடு, வடக்கில் ரத்தினசாமின் நஞ்சை, மேற்கில் ரத்தினசாமியின் புஞ்சை, தெற்கில் வாய்க்கால் உள்ளது. புல எண். 111/2 மற்றும் 113/13ன் நான்கெல்லை தெரியுமா என்றால் கிழக்கில் ராசாங்கம், லெட்சுமணன் ஆகியோர்களின் வயலும், தெற்கில் ரத்தினசாமி, பஞ்சமூர்த்தி ஆகியோர்களின் திடலும், மேற்கு மற்றும் வடக்கில் யார் உள்ளார்கள் என்று தற்போது நினைவில் இல்லை.

2. பிராது சொத்து விபரத்தில் தாவா 3வது அயிட்ட சொத்தாக புல எண். 116/3 என காட்டப்பட்டுள்ளது என்றால் நான் சொல்லவில்லை. புல எண். 116/3 என குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு. வாசாஆ 4 ஆன ஆவணத்தில் புல எண். 216/3ல் 32 ¼ செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 1வது அயிட்ட சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் 1975ம் ஆண்டு எனது தந்தையாருக்கு போக்கியமாக கிடைக்கப்பெற்று அவருக்கு பின்னால் நான் அனுபவித்து வருகிறேன். போக்கிய பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். தாவா 1வது அயிட்ட சொத்தை பொறுத்து போக்கிய பத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. தாவா 2 மற்றும் 3வது அயிட்ட சொத்துகள் எனக்கு எவ்வாறு கிடைத்தது

என்றால் 1980ம் ஆண்டு எனது சிறிய தந்தை ராம் படையாட்சி அவர்கள் எனது தந்தை ரத்தினசாமியிடம் அவரது மகள் திருமணத்திற்கான குழி 1க்கு ரூ. 100/- என கிரய தொகையை பெற்றுக்கொண்டு எனது தந்தையாரிடம் மூல பத்திரத்தை கொடுத்துவிட்டார். தாவா 4 அயிட்ட சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் 1985ம் ஆண்டு எனது சிறிய தந்தை ராம் படையாட்சி அவர்கள் எனது தந்தை ரத்தினசாமியிடம் அவரது கடனை தீர்ப்பதற்காக குழி 1க்கு ரூ. 100/- என கிரய தொகையை பெற்றுக்கொண்டு நிலத்தை கொடுத்துவிட்டார். 2 முதல் 4 அயிட்ட சொத்துகளை பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் செய்துகொள்ள சட்ட நடவடிக்கையை நானும் எனது தந்தையும் ஏன் எடுக்கவில்லை என்றால் அந்த கால கட்டத்தில் அண்ணன் தம்பிக்கு இடையே மரியாதையின் காரணமாக எழுத்து மூலமாக எழுதி வாங்கும் வழக்கம் இல்லை.

4. தாவா சொத்துகளை பொறுத்து வாசாஆ 1, வாசாஆ 3, வாசாஆ 4 ஆகிய ஆவணங்கள் நேர்மையான முறையில் எனக்கும் எனது தந்தைக்கும் கிடைக்காததால் தான் எனது தந்தையோ, அவரது வாரிசுகளோ மேற்படி ஆவணங்களில் கண்டுள்ள சொத்துகளை பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏற்படுத்திக்கொள்ள எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாததால் தான் வாய் மொழியாக எனது தந்தைக்கு கிடைத்ததாக இந்த வழக்கிற்காக பொய் கட்சி எடுக்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்துகளில் எனக்கு உரிமை வேண்டும் என கோரி தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கை 2018ம் ஆம் ஆண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2018ம் ஆண்டு நான் பிரதிவாதிகளுக்கு எதிராக நாகப்பட்டிணம் மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் அதற்கான அழைப்பாணை என்றால் சரிதான். அந்த அழைப்பாணை **பிவாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகாரை எதற்காக கொடுத்தேன் என்றால் பிரதிவாதிகள் எனக்கு எதிராக 2004ம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கானது எனக்கு ஆதரவாக முடிந்தும் அதை எதிர்த்து மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து அந்த மேல் முறையீட்டிலும் எனக்கு சாதகமாக தீர்ப்பு பகரப்பட்டது. அதன் பிறகு மீண்டும் மீண்டும் என்னிடம் பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததால் புகார் கொடுத்தேன்.

6. நான் பிரதிவாதிகளுக்கு எதிராக நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார்

கொடுத்த விபரத்தை எனது வழக்குரையில் சொல்லப்படாததற்கான காரணம் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லாததால் தான் நான் மேற்படி புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ 1 பற்றி விபரத்தை சொன்னால் என் கட்சிக்கு விரோதம் ஆகிவிடும் என்பதால் தான் நான் அதை வேண்டும் என்றே மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துளில் நான் என்ன சாகுபடி செய்தேன் என்று பயிரின் பெயரை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை நான் சாகுபடி செய்யாததால் தான் நான் பயிரின் பெயரை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

7. வாசாஆ 5 ஆன ஆவணத்தில் உள்ள வாய்தா ரசீதுகளில் 29.03.2008ஐ தவிர மற்ற அனைத்தும் 1989, 1992, 1995 உரியது என்றால் சரிதான். வாசாஆ 5 ஆன ஆவணம் அனைத்தும் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்திற்கு உரியது இல்லை என்றால் சரியல்ல. வாசாஆ 5 ஆன ஆவணத்தில் உள்ள ரசீதுகளில் 29.03.2008 தேதியிட்ட ரசீதை தவிர மற்ற அனைத்து ரசீதுகளும் அசல் வழக்கு எண். 343/2004 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்து எனது அனுபவத்தில் இருந்திருந்தால் 2018ம் ஆண்டுக்கு முன்பு உள்ள ரசீதுகளை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

8. தாவா 2வது அயிட்ட சொத்தான புல எண். 216/3ல் 43 செண்ட் நிலத்தை NSL Power Plant ற்கு 2010ம் ஆண்டிலேயே பிரதிவாதிகள் கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி விபரத்தை பிரதிவாதிகள் எதிர் வழக்குரையில் கூறிய பிறகும் இது நாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வாசாஆ 6 ஆன ஆவணம் என்பது 2905.1993 தேதியிட்ட ரசீது என்றால் சரிதான். அதில் கரும்பு பயிரிடப்பட்டுள்ள கிராமம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துகள் அனைத்தும் மேலப்பெரும்பள்ளத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கரும்பு பயிரிடப்பட்டுள்ள கிராமம் கரைமேடு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தெரு பெயர் ஆகும். அந்த ஆவணத்தில் புல எண்களாக குறிப்பிடப்பட்டுள்ளவை தாவா சொத்துகள் இல்லை என்றால் சரியல்ல.

9. வாசாஆ 2 ஆன ஆவணம் என்பது பட்டா நோட்டிஸ் என்றால் சரிதான். அதில் பட்டா எண். 695 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்கள் எதுவும் தாவா சொத்து இல்லை என்றால் சரியல்ல. வாசா ஆ 5 வரிசையில் முதல் ரசீதான 21.02.1992, 21.02.1989 தேதியிட்ட ரசீதுகளில்

பட்டா எண். 305 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சின்னதுரை என்பவர் என்னுடன் பிறந்தவர் அல்ல என்றால் சரிதான். அவர் எனது சிறிய தந்தையின் மகன் ஆவார். தாவா சொத்தை தவிர வேறு சொத்துகளிலும் நான் பயிர் செய்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்துகள் எனது அனுபவத்தில் இல்லாததால் தான் வேறு சொத்துகளில் உள்ள ஆவணங்களை வாசாஆ 5 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் எனது பெயருக்கு அல்லது எனது தந்தை பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா எண்னை நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

10. நான் வாசாஆ 2 ஐ தவிர பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா எண்னை வழக்குரையில் குறிப்பிட்டிருந்தால் வாசாஆ 5 ல் குறிப்பிடப்பட்டுள்ள பட்டா எண்ணிற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என தெரியவந்துவிடும் என்பதால் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 7 ஆன ஆவணம் எதற்கான தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலத்திற்காக கொடுக்கப்பட்ட ஆவணம் ஆகும். அதில் பெருநர், தாசில்தார், தரங்கம்பாடி எனவும், அதன் நகல்கள் மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டிணம், கோட்டாட்சியர் மயிலாடுதுறை, கிராம நிர்வாக அலுவலர், மேலப்பெரும்பள்ளம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவர்களுக்கு அனுப்பட்டதாக தாக்கல்செய்துள்ள ரசீதில் கிராம நிர்வாக அலுவலர், மேலையூர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 7 ஆன ஆவணத்தை பெற்றுக்கொண்டதற்கான எந்த ஒப்புதல் அட்டையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**